**Starting time 01.16 P.M.**

**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No.244/2012**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 22.01.2024 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : ரமேஷ் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u> என்ன பரிகரத்திற்காக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதிலுரையை நான் படித்துப் பார்த்தேனா என்றால், படித்துப் பார்த்தேன். அதிலுள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால், மேலோட்டமாகத்தான் படித்து பார்த்தேன். அதற்கு நான் மறுப்பு பதிலுரை தாக்கல் செய்துள்ளேனா என்றால், செய்துள்ளேன். பிரதிவாதிகள் தங்களுடைய பதிலுரையில் தாவா சொத்து தங்களுடையது என்று கூறியுள்ளார் என்றால் அவ்வாறுதான் கூறியுள்ளார்கள், ஆனால் தாவா சொத்து எனது தகப்பனார் மூலமாகத்தான் வந்தது.

2. பிரதிவாதிகள் சொத்தின் மீது உரிமை கோரியுள்ளதால் நான் சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றால், சொத்தை வாங்கியதிலிருந்து நான்தான் சுவாதீனத்தில் இருந்து வருகிறேன். விளம்புகை பரிகாரத்திற்காக நான் வழக்குரையை திருத்தம் செய்யவில்லை என்றால், செய்துள்ளேன். நான் விளம்புகை பரிகாரத்திற்காக நான் வழக்குரையை திருத்தம் செய்யவில்லை என்றால், சரிதான். கோவிந்தன் என்பவர்

என் தகப்பனார் என்றால், ஆமாம். 1-ஆம் வாதி என் தாயார், 2, 4 வாதிகள் சகோதர சகோதரிகள் என்றால், சரிதான். எனது தகப்பனார் 11.03.1993 தேதியன்று ஒரு சித்தேஸ்வரன் என்பவரிடமிருந்து வழக்கு சொத்தை கிரயம் பெற்றார் என்றால், ஆமாம். அந்த சித்தேஸ்வரன் 18.05.1992-ல் அன்பழகன் மற்றும் அறிவழகன் ஆகியோரிடமிருந்து தாவா சொத்தை கிரயம் பெற்றதாக நான் கூறியுள்ளேன் என்றால், ஆமாம்

3. அன்பழகன் மற்றும் அறிவழகன் ஆகியோரின் பேரில் ஒரு அலமேலு என்பவர் இந்த தாவா சொத்தை பொறுத்தும் அசல் வழக்கு எண். 243/12 வழக்கு சொத்தை பொறுத்தும் ஒரு விளம்புகை பரிகாரம் கோரி ஒரு வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.

Ending Time: 01.22 P.M.

**ஒப்பம்/- என்.திலகேஸ்வரி**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**